

## 2020-ம் ஆண்டில்

# சோலார் கருவி மூலம் 8 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு

## சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் அறிவிப்பு

சென்னை, டிச.28–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் மெட்ரோ ரெயில் நிலையங்களில் சோலார் தகடை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் கோயம்பேடு பணிமனையில் 1.2 மெகாவாட் சோலார் மின் உற்பத்தி நிலையம் தொடங்கப்பட்டது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் சோலார் மின் உற்பத்தி நிலையங்களின் மொத்தக் கொள்ளளவு 5.2 மெகாவாட் ஆகும். மேலும் தற்போது, அசோக்நகர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் 260 கிலோவாட், மண்ணடி மெட்ரோ ரெயில் நிலைய கூரை மேல் 20 கிலோவாட் சோலார் தகடு மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து, மின்சாரம் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

இதுவரை மெட்ரோ ரெயில் நிறுவனம் 5.5 மெகாவாட் திறன் மின்சாரம் உற்பத்தி செய்துள்ளது. 2020–ம் ஆண்டில் 8 மெகாவாட் மின்சாரம், சோலார் கருவி மூலம் உற்பத்தி செய்ய மெட்ரோ ரெயில் நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன் பின்னர் ஆண்டுதோறும் 1 கோடியே 16 லட்சத்து 80 ஆயிரம் யூனிட் மின்சார உற்பத்தி செய்யப்படும்.

இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.2.54 கோடி சேமிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வெளிவரும் கரியமில வாயுவின் வெளியீடு அளவு ஆண்டுக்கு 11 ஆயிரத்து 587 டன் ஆக குறையும்.

மேற்கண்ட தகவல்கள் அனைத்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.